**03.07.2026**

**MCOP. No.142/2024**

**எ.ம.சா.1 – திரு.வினோத்குமார்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.11 பி.ப**

நான் நிர்வாகத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. TN 58 N 1972 என்ற பேருந்தில்தான் நான் நடத்துநராக இருந்தேன். நான் நடத்துநர் என்பதற்கு எனது அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால், தற்பொழுது என்னிடம் அடையாள அட்டை உள்ளது என்று சாட்சி தனது அடையாள அட்டையை காண்பிக்க அது நீதிமன்றத்தால் கண்ணுற்றப்பட்டது. அந்த அடையாள அட்டை TNSTC மதுரை கிளையால் சாட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் அவரது எண் CR66392 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேருந்தின் தடம் எண்.74X ஆகும். எங்கள் பேருந்திற்கு பர்மீட் எங்கு உள்ளது என்றால் தேனி டூ மதுரை. அந்த பரமீட்டை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பேருந்து காலை 06.00 மணிக்கு தேனியில் எடுத்து திரும்பவும் இரவு 11.45 மணிக்கு தேனி செட்டிற்கு போக வேண்டும். இந்த பேருந்து 3 முறை மதுரைக்கும் ஒரு முறை போடிக்கும் ஒரு நாளில் செல்லும். வாகனத்தின் மாடல், வருடம் தெரியாது. உண்மையாகவே அந்த பேருந்தின் தடம் என்பது ஓடைப்பட்டி டூ தேனி, தேனி டூ மதுரை, மதுரை டூ கம்பம், கம்பம் டூ மதுரை, மதுரை டூ தேனி shed in இரவு 10.20 மணி என்றும் இந்த விபரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த பேருந்தின் உண்மையான பர்மீட் ரூட்டை பொறுத்து எங்கள் அலுவலகத்திலிருந்து மேலாளர் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளாரா என்றால் அழைத்து விசாரிக்கலாம். அந்த பேருந்திற்கு இறந்த தங்கபாண்டி தவிர ராஜா என்ற மாற்று ஓட்டுநர் உள்ளார் என்றால் சரிதான். வாகனத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதை எழுதுவதற்காக ஆவணத்தின் பெயர் log sheet. ம.சா.ஆ.9ல் 04.09.2023ம் தேதிக்கு அந்த வாகனத்திற்கென்ற குறைபாடு 5 எண்ணம்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 18:39:17 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குறைபாடுகள் 1. டிரைவர் டோர் லாக் இல்லை. கயிறு போட்டு கட்டி உள்ளது. 2. மழை பெய்தால் உள்ளே அனைத்து இடமும் ஒழுகுகிறது. 3. ஜன்னல் கண்ணாடி 6 இல்லை. 4. பின் இடது சிலாக் மாற்றவும். 5. Head Light வெளிச்சம் மிகவும் குறைவாக உள்ளது என்று இறந்துபோன தங்கபாண்டி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இதே குறைபாடு சொல்லிதான் ஓட்டுநர் ராஜாவும் 05.09.2023 அன்று எழுதியுள்ளார் என்று என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.9ல் காணப்படுகிறது என்றால் சரிதான். விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது புகாரின் பேரில்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் தங்கபாண்டியன் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அது போன்ற எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அவர் கண் அசந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அப்பொழுது பின்னால் உட்கார்ந்து இன்வாய்ஸ் முடித்து கொண்டிருந்தேன், திடீரென்று எனக்கு கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது, நான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்துவிட்டேன். கண் விழித்து பார்த்தபோது டிரைவர் இருக்கையில் இல்லை. பார்த்தபோது அவர் சாலையின் ஒரு புளியமரத்திற்கு அருகில் பென்சிங் கல் இருந்தது அதில் இறந்து கிடந்தார். எதனால் சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வண்டியில் முகப்பு விளக்கு குறைவாக இருந்ததா ஓட்டுநர் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். அன்றைய தினம் மழை பெய்ததா என்றால் இல்லை. டயர் வழுக்கையாக இருந்ததா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் சாலை லேசா வளைந்திருந்தது என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு 100 மீட்டர் முன்பு கிழக்கா லேசான வளைவு இருந்தது என்றும் அப்பொழுது லேசாக மழை பெய்தது என்றும் அப்பொழுது முகப்பு விளக்கு வெளிச்சம் குறவைாக இருந்ததாலும் டயர் வழுக்கையாக இருந்ததால் ஓட்டுநர் வளைவில் லேசாக பிரைக் அடித்ததால் அவரது கட்டுபாட்டை மீறி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அப்பொழுது 19 பயணிகள் இருந்தார்கள். பயணிகள் யாருக்கும் காயமில்லை. எனக்கு லேசாக கையில் கண்ணாடி துகள் பட்டிருந்தது. T.T ஊசி மட்டும் போட்டிருந்தேன். மேற்சொன்ன


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 18:39:22 +0530

விபரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், சிறிய காயம் என்பதால் சொல்லவில்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் wind screen damage என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நாங்கள் கடைசி நடை எடுப்பதற்கு முன்பு கணவாய்க்கு முன்புகா டீ சாப்பிட்டு வாகனம் எடுப்போம் என்றால் சரியல்ல. இந்த விபத்தனாது வாகனத்தில் உள்ள பழுதுகள் காரணமாகவும் சைடு டோர் லாக் இல்லாமல் இருந்ததாலும் அவர் கீழே விழுந்து இறந்துள்ளார் என்றும் விபத்திற்கு அவருடைய கவனக்குறைவு காரணம் இல்லை என்றால் எனக்கு விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது. எனவே, நிர்வாகம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் தெரியாது. நான் புகார் மற்றும் முதல் விசாரணையில் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் என்து சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.40 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.03 18:39:26 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 03.07.2026